**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்.**
**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ** L.L.M.,
**( J.O.Code No.TN 02207)**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்**

**2026–ம் ஆண்டு ஜுலை மாதம் 2ஆம் நாள் வியாழக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம், ஆனி திங்கள் 18ம் நாள்**

**இ.ம.எண் 329/2026**
**இன்**
**அ.வ.எண்.42/2020**

1. கண்ணன்
2. V. பாலசுப்பிரமணியம்
3. தென்னரசு
4. யோகலட்சுமி
5. கலைவாணி
6. ஸ்ரீதேவி ..மனுதாரர்கள்/ 7 முதல் 12 பிரதிவாதிகள்

..எதிர்..

1. சாந்தாமணி
2. பூங்கொடி
3. சரஸ்வதி
4. கதிரேசன்
5. துரைசாமி
6. ராமாத்தாள்
7. கௌதம்
8. ராதிகா ..எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

கடந்த 29.06.2026ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.V.கிரி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், நிகழ்த்திய இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 8 விதி 1Aன் கீழ் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u> :–**

மனுதாரர்கள் அசல் வழக்கில் 7 முதல் 12 பிரதிவாதிகள். அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 7 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மனுதாரர்களுக்கு சில முக்கியமான ஆவணங்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றது. ஆகையால் மனு ஆவணங்களை எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்ய இயலவில்லை. எனவே, மனு ஆவணங்களை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மனு ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்ய அனுமதிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :–</u>**

**3.1** மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று. அது சட்டப்படியும் பொருண்மைகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. பிரமாண பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள காரணங்கள் அனைத்தும் கற்பனையானவை மற்றும் நீதிமன்றத்தை திசை திருப்பும் நோக்கத்துடன் நீதிமன்றத்தின் காலத்தினை எதிர்மனுதாரர்கள் வீணடிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது மனுதாரர்கள் தாக்கல் செய்ய கோரும் அனைத்து ஆவணங்களும் ஏற்கனவே அவர்களுடைய வசம் இருந்தவை. இந்த ஆவணங்களை வழக்கின் எதிர்வழக்குரையை தாக்கல் செய்யும்போதே ஏன் தாக்கல் செய்யவில்லை என்பதற்கு மனுதாரர்கள் எவ்விதமான தகுந்த நியாயமான மற்றும் சட்டபூர்வமான காரணங்களையும் பிரமாண பத்திரத்தில் குறிப்பிடவில்லை.

**3.2** அசல் வழக்கு எண்.295/2018 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பினர்கள் இல்லை. அவ்வழக்கு சொத்து விபரமும் இவ்வழக்கின் சொத்து விபரமும் வெவ்வேறானவை. மேற்படி மனுவானது வழக்கின் விசாரணையை காலதாமதப்படுத்துவதற்கும், வழக்கினை நடத்தாமல் இழுத்தடிப்பதற்கும் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர்களின் கெட்ட உள்நோக்கம் நீதிமன்ற நேரத்தை வீணடிப்பதோடு வாதிகளுக்கு கடுமையான மன உளைச்சலையும் இழப்பையும் ஏற்படுத்தும். எனவே மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**5.** மனுதாரர்கள் தரப்பில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ?என்பதே ஆகும்.

**6. <u>தீர்வு</u> :–**

**6.1** மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், மனு ஆவணங்கள் தாவா சொத்து தொடர்பானவை என்றும், அ.வ.எண்.295/2018ல் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பாணை அசல் வழக்கிற்கு தொடர்புடையது என்றும், மேற்படி ஆவணம் நீதிமன்ற கவனத்திற்கு உட்பட்டது என்பதால் அதைப்பற்றிய சங்கதிகளை எதிர்வழக்குரையில் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை என்றும், மேற்படி வழக்கில் மனுதாரர்கள் தரப்பினர்கள் என்பதாலும், மனு ஆவணங்கள் அசல் வழக்கின் தீர்விற்கு அவசியமான ஒன்று என்பதாலும் மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2** எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் அவர்களது வாதத்தில், அ.வ.எண்.195/2018ல் எதிர்மனுதாரர்கள் தரப்பினர்கள் இல்லை என்றும், மேற்படி வழக்கு Recovery of Money வழக்கு என்பதால் அவ்வழக்கிற்கும்,

அசல் வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்பதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6.4** அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர்கள்/ 7 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய அனுமதி வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.5** அ.வ.எண்.195/2018 வழக்கிற்கும், இவ்வழக்கிற்கும் உள்ள தொடர்பு அசல் வழக்கில் இருதரப்பு சாட்சி விசாரணைக்கு பின்னிட்டு தான் தீர்வு காண இயலும். அசல் வழக்கில் பல்வேறு கிரைய ஆவணங்கள் செல்லாது என்று விளம்புகை பரிகாரமும், அதன் தொடர்ச்சியாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரப்பட்டுள்ளதால், இருதரப்பினர்களுக்கும் அவர்களது தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை தாக்கல் செய்வதற்கு போதிய வாய்ப்பளிப்பது அசல் வழக்கின் தீர்வுக்கு காண்பது நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என்று முடிவு செய்து, மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 02ம் நாள் அவையறிய பகரப்பட்டு, மேற்படி தேதியன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.07.02 05:21:03 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2026.07.02 05:21:12 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.